கோபாலபுரத்துக் கோகிலமே!... சிலந்தி எனும் சித்திரமே!..

சிப்பிக்குள் இருந்த சீரிளம் சிதையாத முத்தாய்; மண்ணுக்குள் புதைந்த பொன் புதையல் சொத்தாய்; முரசொலி முகில் உறைக்குள் முகம் மறையா முழுமதியாய்; பகை வீழ்த்தும் சிறை சிலிர்த்த உறங்கா வாள் சிலந்தியாய்; எதிரிகளும் உண்ண இயலாத கந்தகத் தீவனமாய்; களப்போ ரில் பார்த்தசாரதி எனும் கழகத் தேர்ப்பாக னாய் உயிர்த் துடிப்பாய் இருந்த திராவிடப் போர்வாளாய், மண் போர்த்திய விதைக் கரு முளையாய்; இயக்க மலர்க் கூட்ட மல் லிக்காட்டில் மணம் பரப்பும் மாமனிதராய் வாழ்ந்து; நம் நெஞ்சக் கூட்டில் விஞ்சியவராய் வாழ்ந்து வந்த கலைஞர் மடி தவழ்ந்த கழகச் செல்வம், காருண்ய வடிவம் நம்மை விட்டுப் பறந்து சென்று இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டனவே!*

இந்தித் திணைப்புப் போரில் களங்கள் கண்ட கழகக் காளை தமிழ்மொழி காக் கும் போர்ப்படையின் மாணவ மறவர்! சட்டக் கல்லூரியில் கழகத்திற்கென மாண வப் பட்டாளத்தை உருவாக்கிக் காட்டிய மாண்பாளர்! திராவிட இயக்கத்தில் திகட் டாத தென்மொழி எழுத்தாளர்! தமது எழுத் துப் பணியில் ஆள வந்தார்களுக்கு அடிப் பணியா அரிமா! தவறு இழைப்போரைத் தமது எழுதுகோலால் தண்டிப்பதில் தலை தாழாச்சிங்கம்! வரிசை கட்டி வந்த வார்த்தைப் பகைவர்களைத் தமது எழு துகோல் வாளால் பந்தாடிய வணங்கா முடி!நெருக்கடி நிலையில் நிலைகு லையா நெஞ்சக் குன்றம்! சர்வாதிகாரிகளின் சட்டமன்றக் கூண் டில் ஏற்றப்பட்ட போதும் முரசமாய் ஒலித்த சங்க நாதம்! ஜனநாயகம் காக்க வலிமை மிகு வாதங்களால் முரசொலித்து வென்ற வல்லமையாளர்! தமது சித்திர எழுத்துக்களால் சீர்திருத்தம் கண்ட சிங் கார நடையாளர்; அன்றாடச் செய்தியாய் அரங்கேற்றும் உரையாடல்களில், கட்டு ரைகளில், நாடகங்களில் நக்கல் – நையாண்டி கலந்து தந்த நவரச நாயகர்! கருத்தோவிய எழுத்துக்களால், எதிரிக ளைக் காயப்படுத்தாமல் "நச்" என்று, நாக ரிக விமர்சனம் செய்து வந்த சிலந்தியார்!

பெரியார், அண்ணாவின் பகுத்தறிவு நடைபயின்ற பண்பாளர்! சனாதன எதிர்ப் புச் சண்டமாருதப் போராளி! தீந்தமிழர் போற்றும் திரைப்படத் தயாரிப்பாளர்! உணர்வுமிக்க பல பரப்புரைச் செய்திகள் தந்து கொண்டிருந்த, உறக்கம் கொள்ளா ஊடகவியலாளர்! அனைவரிடத்தும், அரவ ணைப்பு, அன்புப் பாராட்டிப் பழகும் பரந்த குணத்தால் கடலைப் போல அமைதியான வர்!

அச்சமில்லா அறிவினில் அடக்கம் நிறைந்தவர்! பேரறிஞர் அண்ணாவின் நட்பில் பெருமை கொள்ளத்தக்க பிழையி லாச் சீடர். காவிரிக் கரை நீண்டெழும் தஞ்சை மண் தந்த கலைஞரின் மருமக னார்! முத்தமிழ் அறிஞரின் மகளார் செல்வி பெற்ற வாழ்வியல் இணையர்! மூச்சு தோறும் முன்னேற்றக் கழகக் கொள்கை யைப் பரப்பி வந்த முரசொலி மாறனாரின் ஆருயிர் இளவல்! தளபதியாரின் கருத்துப் பரிமாற்றங்களுக்கு வடிகாலாக இருந்த வாஞ்சைமிகு வசிட்டர்! கலைஞர் குடும்பத் தில் எஞ்சிய கலைஞர்! கொடிமரம் காத்துக் கொள்கை வழி நின்ற கோபாலபுரத்துக் கொஞ்சும் புறா!



விரிந்து, பூ, பிஞ்சு, காய், கனியாய் குலுங்கி, விழுது விட்ட விருட் சத்தின் வேரானது . மண்ணில் மறைந்து வாழ்வது போல் வாழ்ந்து வந்த என் அண்ணனை நானும், கழகமும் இழந்து விடோமே!

நாள் தோறும் அண்ணன், தம்பிகள் நாங்கள் இரண்டு, மூன்று முறையாவது தொலைப்பேசி அழைப்பில் பேசிக் கொள்வோமே!தலைவர் பேச்சைக் கேட்டீங்களா?நிகழ்ச்சிக்குச் சென்று இருந்தீர்களா? படித்தீர்களா? வேறு என்ன செய்தி? என்றெல்லாம் கேட்டுக் கேட்டு மனம் மருகுவாரே. இப்பொழு துதான் என்னிடம் தலைவர் ஸ்டாலின் பேசினார்... என்றெல்லாம் சொல்லு வாரே, இறக்கும் முன்னர் இரவில் கூட ஆந்திர நடிகர் ஒருவர் பேசிய பேச்சின் விவ ரம் என்ன? அதற்குத் துணை முதல்வர் உதயநிதி அளித்த பதில் விவரம் என்ன? என்றெல்லாம் என்னிடம் கேட்டு, அவர் அறிந்து வைத்திருந்த செய்திகளுக்கு நான் சரியாகப் பதில் சொல்கிறேனா என்று வின வினாரே?...

அடுத்து வரும் முரசொலியில் கட்டுரைக் குத் தயாரானாரே?... ஆனால் காலத் தேவ தையின் கோரக் கரங்களின் பிடியில் படுக் கையிலேயே, அவரின் பூ போன்ற மென்மையான உயிரைப் பறித்துச் சென்று விட்டதே!

சிலந்தியார் எனும் பேரில் எழுதும் கட் டுரை ஒன்றினை முரசொலி ஏட்டில் "நிகழ்ச்சி ஒன்றின் மேடையில் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அவர்கள், முன்னாள் ஆந்திரா -புதுவை ஆளுநர் தமிழிசை அவர்களை நடத்திய விதம் குறித்து, கடந்த ஜூன் மாதம் 19ஆம் தேதி "பதவிப் படுத்தும் பாடு" என்ற தலைப்பில் அண்ணன் முர சொலி செல்வம் அவர்கள் எழுதியிருந்தார். அதைப் படித்து விட்டுச் செல்பேசியில் நான் பேசினேன்.

பிறகு அவர் எழுத்தைக் கண்டு பெரு மைப்பட்ட நான், அவரைப் பற்றியும் – அவ ரது எழுத்தைப் பற்றியும் கவிதை ஒன் றைத் தீட்டி அனுப்பி இருந்தேன். அதனை அவர் படித்துவிட்டு, "நன்றி. வணக்கம் .சிறப்பான கவிதை. அந்த வரிகளுக்கு ஏற் புடையவனாக இருந்திட நான் முயற்சி செய்கிறேன். நன்றி." என்று எனக்குப் பதில் தகவல் அளித்து இருந்தார். ஏறத்தாழ நாற் பது ஆண்டுக் கால நட்பில் நான் எதை மறப்பது? எதை விடுப்பது? இதோ அவ ரைப் பற்றி நான் எழுதிய அந்தக் கவிதை ....

தங்கள் எழுத்துகளுக்கான தங்களுக்கு ஒரு பாராட்டுக் கவிதை : – அறுசீர்வி ருத்தம்.

உரம்பல போடு கின்றீர்;
உளத்திடைக் கழகம் ஓங்க!
முரசொலி செல்வம் என்ற
முன்னேற்றக் கழகச் சொத்தே!
தரமிகு கருத்துக் கோலத்
தாக்கத்தை ஏற்ப டுத்தும்
வரம் தரும் எழுது கோலால்
வாழ்வெல்லாம். இனிக்கின் றீரே.!

அரசியல் பகைவர் தம்மை
அநீதி இலக்க ணத்தைப்
புரட்டியை டுக்கும் அடிதான்!
புயல்தான்! பூகம் பம்தான்!
புரவியின் வீறு வீச்சால்
புண்ணாக்கும் உன்றன் சாட்டை!
வரம்பினைக் தகர்க்க காண்போம்!
வாய்மையால் வெல்வீர் வாழ்க!

நரம்பொலி விரல்கள் மீட்டும்
நாதத்தின் வீணை அன்ன;
பரம்பொருள் பெரியார், அண்ணா
பாதையை நெஞ்சில் போற்றிக்
கரம்பற்றிக் கலைஞர் நின்றார்!
கண்ணேஎம்செல்வம்அண்ணா!
சரமல்லிப் பூவின் வாசம்
தந்திட எழுது கின்றீர்!

எத்தனை வீச்சு! தங்கள்
எழுத்தெல்லாம் கழக மூச்சு!
முத்தினைக் கோத்த மாலை
முகவரி அழகே! என்றும்
சொத்துதான் இயக்கப் பாட்டே!
செகமது தழைக்க என்றும்
வித்தான்றி வளரச் செய்யும்
விளைநெல் கழனி வார்ப்பே!

விரல்வலி யெடுக்க நாளும்
விழிஇரு பாவை நோக
முரசொலி ஏட்டில் எழுதி
முழக்கத்தை எழுப்பு வாய்நீ!
குரலொலி நாளும் வேண்டும்;
சிலந்தியார் எழுத்து கண்டே
கரவொலி எழுப்பு வாரே
கண்ட நம் தோழர் எல்லாம்!

சரவெடி போன்ற சீறிச்
சிரிக்கின்றீர்! உறுமு கின்றீர்!
சுரம்வர நைய மெல்லச்
சமயத்தில் புடைக்கின் றேரே!
சிரந்தாழ இழுத்துக் கையில்
குட்டவும் செய்கின் றீரே!
மரமண்டை மனிதர்க்கு
மந்திரிக்கவும் செய்கின்றீர்!

கவிஞர் தமிழ்தாசன்
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்



ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் நடவடிக்கையா?

பெரியபாளையத்தில் ஆட்டோ ஓட்டுநர்கள் த.வெ.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

அக். 31-க்குள் திட்டத்தை ரத்து செய்யாவிட்டால் கோட்டையை முற்றுகையிடுவோம் என எச்சரிக்கை!



திருவள்ளூர் அக். 11- ஏழை, எளிய மக்க ளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதே அரசின் கடமை! அன்றாடம் உழைத்துப் பிழைக்கும் ஆட்டோ ஓட்டுநர்களின் குடும்பங்களின் நிலை என்ன? என்ற கேள்வியை எழுப்பி, திருவள்ளூர் மாவட்டம் பெரியபா ளையத்தில் ஆட்டோ ஓட்டுநர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.

பெரியபாளையம் மற் றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட ஆட்டோக் கள் இயங்கி வருகின்றன. பொதுமக்களின் அன்றா டப் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்று வதுடன், ஏராளமான குடும்பங்களின் வாழ்வா தாரமாகவும் ஆட்டோ தொழில் விளங்கி வருகி றது.

இந்நிலையில், கடந்த 2-ம் தேதி முதல் பெண்க ளுக்கு இலவசப் பேருந் துப் பயணத் திட்டம் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து, தங்களின் வருமானம் பாதிக்கப்படு வதாக ஆட்டோ ஓட்டு நர்கள் கவலை தெரிவித் துள்ளனர்.

மகளிருக்கு இலவசப் பயணம் என்பது வர வேற்கத்தக்கதுதான்; அதே நேரத்தில், ஆட்டோ ஓட்டுநர்களின் வாழ்வாதாரமும் பாது காக்கப்பட வேண் டாமா? என்ற கேள் வியை முன்வைத்து, பெரியபாளையத்தில் ஆட்டோ ஓட்டுநர்கள் தங்களது எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

பெரியபாளையம் ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத் தலைவர்கள் கோபி, மன்சூரலி, சுனில் ஆகியோர் ஆர்ப்பாட் டத்திற்குத் தலைமை தாங்கினர். சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்ட கம்யூ னிஸ்ட் கட்சியின் வட் டக்குழுத் தலைவர் அருள், சிஐடியு மாவட்டத் துணைத் தலைவர் வேலு ஆகியோர் சிறப்புரை யாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில், இலவசப் பேருந்துப் பய ணத் திட்டத்தால் தங்க ளின் தொழில் பாதிக்கப் படுவதாகக் கூறிய ஆட்டோ ஓட்டுநர்கள், தங்களின் வாழ்வாதாரத் தைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியு றுத்தினர்.

மேலும், ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள மோட்டார் வாகனச் சட் டத்தாலும் தாங்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்த அவர்கள், உழைக்கும் தொழிலா ளர்களின் நலனைக் கருத் தில் கொண்டு உரிய தீர்வை ஏற்படுத்த வேண் டும் என்று முழக்க மிட்ட னர்.

வரும் அக்டோபர் 31-ம் தேதிக்குள் இலவசப் பேருந்துப் பயணத் திட் டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று ஆர்ப் பாட்டத்தில் பங்கேற்ற வர்கள் கோரிக்கை விடுத் த னர். கோரிக்கையை நிறைவேற்றாவிட்டால், கோட்டையை நோக்கிப் பேரணியாகச் சென்று முற்றுகைப் போராட்டத் தில் ஈடுபடுவோம் என் றும் எச்சரித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத் தில் பெரியபாளையம், தண்டலம், பாலவாக்கம், கன்னிகைப்பேர், வடம துரை உள்ளிட்ட சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டு நர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.



தாம்பரத்தில் உலக பார்வை தினத்தை முன்னிட்டு வாசன் கண் மருத்துவமனை நடத்தும் மாணவர்கள் விழிப்புணர்வு நடை பயணத்தை பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளரும் மண்டல குழு தலைவருமான டி.காமராஜ் துவக்கி வைத்தார். உடன் தலைமை மருத்துவ அதிகாரி டி. கணேஷ்,மருத்துவக் குழுவினர், சதீஷ் 49வது வட்ட துணைச் செயலாளர் மற்றும் மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

2027 மார்ச்சில் மேகதாது அணைக்கான அடிக்கல் நாட்டப்படுமாம்!

கர்நாடக அமைச்சரின் பேச்சால் தமிழக விவசாயிகள் கொந்தளிப்பு!

பெங்களூரு, அக். 11- அடுத்த ஆண்டு மார்ச் மாதம் மேகதாது அணைக்காண அடிக் கல் நாட்டப்பட்டுவிடும் என கர்நா டக நீர் பாசனத்துறை அமைச்சர் செல்வராயசாமி பேசியுள்ளது தமி ழக விவசாயிகளி டையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள் ளது.

கர்நாடக மாநிலம் மண்டியா பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய அமைச்சர் செல்வராய சாமி, "மேகதாதுவில் புதிய அணை கட்டுவதே காவிரி பிரச்சி னைக்கு நிரந்தரத் தீர்வு என்றும். அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற் குள் மேகதாதுவில் புதிய அணை கட்ட அடிக்கல் நாட்டப்படும் என் றும் அறிவித்தார்.

இத்திட்டத்திற்கான தயாரிப்புப் பணிகள் 99 சதவீதம் நிறைவ டைந்து விட்டதாக வும் அவர் கூறி னார். கர்நாடக அமைச்சரின் இந்த அறிவிப்பு தமிழக விவசாயி களிடையே அதிர்ச்சியையும், கொந் தளிப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

தமிழகத்தில் கடந்த 14 ஆண்டு களில் இல்லாத அளவிற்கு தண் ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. தற்பொழுது தமிழக அணை களில் உள்ள தண்ணீரை அடுத்த 18 நாட் களுக்கு மட்டுமே பயன்படுத்த முடி யும் என்பது விவசாயிகளுக்கு வேதனையான செய்தியாகும்.

தாம்பரத்தில் குடிநீர் தட்டுப்பாடு!

சென்னை, அக். 11- தாம்பரம் மாநகராட்சி 3வது மண்டலத்தில் நிலவிவரும் குடி நீர் பிரச்னைக்கு அதிகாரிகள் முற்றுப்புள்ளி வைக்கவேண் டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர். தாம்பரம் மாநகராட்சி 3வது மண்டலத்துக்கு உட்பட்ட செம் பாக்கம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த 6 மாதங்க ளாக குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு குடிநீர் தட்டுப்பாடு அதிகரித்துள்ள நிலையில், இதனை சமாளிக்க மாநகராட்சி அ தி கா ரி க ள் உ ரி ய முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என பகுதி மக்கள் மற்றும் நலச்சங் கத்தினர் கு ற் ற ம் சா ட் டு கின்றனர்.

குறிப்பாக, 41வது வார்டு டெல் லர்ஸ் அவென்யூ பகுதி 1, 2 மற் றும் நீஷா அவென்யூ உள்ளிட்ட பகுதிகளில் நீண்டகாலமாக குடி நீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. வார்டு 41ஐ சுற்றியுள்ள பகுதிகளி லும் இதே நிலை தொடர்வதாக கூறப்படுகிறது. இப்பகுதிகளில் ஒரு நாள்விட்டு ஒரு நாள் என்ற அடிப்படையில் குடிநீர் விநியோ கம் செய்யப்படுவதாகவும், அவ் வாறு விநியோகிக்கப்படும் குடிநீ ரும் மு றை யா க வும் . போதுமான அளவிலும் கிடைப்ப தில்லை என்றும் பொதுமக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வால்பாறை பூ.ஏ.நவாஸ்கான்
அக்டோபர் 11 (2008)



இளமைப் பருவத்திலிருந்தே கழகப் பணியாற்றியவர்.

கோவை மாவட்டத்தின் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும், ஒன்றிய அவைத்தலைவராகவும் கழகத்தில் பொறுப்பு வகித்தவர்.

1989ல் கழக ஆட்சியில் வால்பாறை நகராட்சியில் அரசு உறுப்பினராக தலைவர் கலைஞர் அவர்களால் நியமிக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

தலைவர் கலைஞர்மீது உள்ள பற்றால் எதிர்க்கட்சியின் தாக்குதலுக்கிடையிலும் 1973 முதல் "கலைஞர் உணவகம்" வால்பாறையில் நடத்தியவர்.

வால்பாறை பெரியபள்ளிவாசல் முத்தவல்லியாகவும் – வால்பாறை வியாபாரிகள் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.